**பண்டுவஸ்நுவர பிரதேச சபை - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பண்டுவஸ்நுவர பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கை தகவல்கள் உள்ளடங்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பண்டுவஸ்நுவர பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தை வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா என்பதும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஹெட்டிபொல தமின்னகஹமுலஹேன தோட்டத்திலுள்ள பல்நோக்கு சேவை நிலைய கட்டிடத்தின் பெறுமதி ரூபா 41,570,143 ஆல் அதிகரித்து காட்டப்பட்டுள்ளது. | இறுதி நிதிக்கூற்றுக்கள் 2024 மூலம் சீர்செய்யப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இது சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2023 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 100,100 தொகையான 08 பொருட்களின் பெறுமதி மீளாய்வாண்டில் கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டிய 18 பொருட்களின் ரூபா 2,097,645 கூட்டுமொத்த பெறுமதி தளபாடங்கள் மற்றும் பொருத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | 02 செயற்திட்டங்களின் ரூபா 1,324,579 கூட்டுமொத்த பெறுமதியான அபிவிருத்தி செலவினங்கள் | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | சொத்துப் பதிவேட்டில் சேர்க்கப்பட்ட ரூபா 2,450,000 மொத்த பெறுமதியுடைய ஐந்து காணி சொத்துக்கள் மீளாய்வாண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடனான இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் பின்வருமாறுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் 134 ஆம் பிரிவு | அபிவிருத்தி செய்யப்பட்ட மற்றும் சேவைகளை வழங்கும் பகுதிகளை சபையினால் பிரகடனப்படுத்துவதற்கும் கட்டணங்களை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்கப்படுகிறது. | பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் நிதிப்பிரமாணம் 570 மற்றும் 571 | பிரமாணங்களின் பிரகாரம் ரூபா 1,334,032 பெறுமதியான 116 காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) பிரதேச சபை நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் 218 ஆம் ஒழுங்குவிதி | நியமித்த சபை மூலம் காணி மற்றும் கட்டிடங்களின் வருடாந்த மெய்மையாய்வு நடாத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | ஒழுங்குவிதியின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) உள்ளூராட்சி சுற்றறிக்கைகள் | | | |
| (i) 2018/07/19 ஆம் திகதிய 2018/elocal government 01 ஆம் இலக்க சுற்றறிக்கை | விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கும், ஒன்லைனில் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கும் குடிமக்களுக்குத் தேவையான வசதிகள் செய்யப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்கப்படுகிறது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) 2010/07/30 ஆம் திகதிய 2010/02 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 1.2 ii ஆம் பிரிவு | சிரமப்படும் உத்தியோகத்தர்களுக்கு 02 வருடங்களுக்கு ஒரு தடவை பிரதேச இடமாற்ற முறைமை நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினங்களை மிகைத்த வருமானம் ரூபா 21,770,587 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களை மிகைத்த வருமானம் ரூபா 45,284,101 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான மூலம் | 2023 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாற ான மொத்த நிலுவை | 2022 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாற ான மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 |
| வீதவரிகள் | 1,835 | 1,739 | 2,362 | - | 1,835 | 1,737 | 2,416 | - |
| வாடகைகள் | 9,035 | 22,453 | 22,522 | 107 | 16,565 | 20,597 | 20,737 | 172 |
| உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 3,450 | 2,401 | 2,401 | - | 3,450 | 2,157 | 2,157 | - |
| ஏனைய வருமானம் | 5,800 | 616 | 797 | - | 5,302 | 4,969 | 5,489 | 167 |
| **மொத்தம்** | 20,120 | 27,209 | 28,082 | 107 | 27,152 | 29,460 | 30,799 | 339 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 107,500 தொகையான கடை வாடகை நிலுவைகள் இருந்தன. | அவதானிப்புடன் இணங்கப்படுகிறது. | நிலுவை மீதிகளை உடனடியாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் ஏப்ரல் முதல் மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறப்பட வேண்டியிருந்த நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 4,049,681 ஆக இருந்ததுடன் முத்திரைத் தீர்வை ரூபா 48,631,649 ஆக இருந்தது. | -மேற்படி- | விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தால் ஒதுக்கப்பட்ட பணிகளின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திடக்கழிவு முகாமைத்துவத்திற்கான மூலதனம் மற்றும் மீண்டெழும் செலவினமாக ரூபா 27,402,740 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் கழிவு விற்பனை மூலம் கிடைத்த வருமானம் ரூபா 183,830 மாத்திரமே ஆகும். | -மேற்படி- | உக்கும் மற்றும் உக்காத குப்பைகளை முறையாக முகாமை செய்வதற்கும், வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய 03 கணக்குகளின் பெறுமதி ரூபா 18,517,491 ஆகும். | அவதானிப்புடன் இணங்கப்படுகிறது. | பெறவேண்டிய மீதிகளை உடனடியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய 03 கணக்குகளின் பெறுமதி ரூபா 85,406,036 ஆக இருந்தது. | -மேற்படி- | செலுத்தப்பட வேண்டிய மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | முன்னைய ஆண்டின் நடைமுறை பொறுப்புக்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 4,074,814 பெறுமதி சேர் வரி நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேலும் தீர்க்கப்படாமல் இருந்தது. | -மேற்படி- | மொத்த பெறுமதி சேர் வரி தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | ரூபா 63,949,396 மொத்த பெறுமதியுடைய பன்னிரண்டு பாதீடப்பட்ட செயற்திட்டங்கள் மீளாய்வாண்டில் தொடங்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்கப்படுகிறது. | திட்டங்களை வெற்றியடையச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 18 ஊழியர்களிடமிருந்து ரூபா 154,747 அறவிடமுடியாத ஊழியர் கடன் இருந்தது. | -மேற்படி- | ஊழியர் கடன்கள் முறையாக அறவிடப்பட வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காணி, கட்டிடங்கள், வாகனங்கள், பொறி மற்றும் இயந்திரங்களுக்கான நிலையான சொத்து பதிவேடு நாளதுவரை பேணப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்கப்படுகிறது. | நிலையான சொத்து பதிவேடு நாளதுவரையாக்கப்பட்ட முறையில் பேணப்பட வேண்டும். |
| (ஆ) | சபையால் 5091 தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வந்ததுடன் 100 மாத்திரமே பௌதீக எண்களுடன் இருந்தன. இதேபோல், தெரு விளக்குகளின் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்கப்படவில்லைஇ மேலும் தெரு விளக்குகள் பற்றிய தகவல்கள் | -மேற்படி- | முடிந்தவரை, சபைக்கு சொந்தமான அனைத்து தெரு விளக்குகளின் பாதுகாப்பு மற்றும் கட்டுக்காப்பிற்காக பொது நம்பிக்கைப்பொறுப்பா |

| | | |
|---|---|---|
| CAT கணனி முறைமையில் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை. | | ளர்கள் நியமிக்கப்பட வேண்டும். |
| (இ) முன்னைய ஆண்டிலிருந்து ரூபா 700,350 கூட்டுமொத்த பெறுமதியிலான நான்கு வாகனங்கள் மீளாய்வாண்டில் மதிப்பீடு செய்யப்பட்டு அந்த பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்கப்படுகிறது. | சொத்துக்கள் மதிப்பிடப்பட வேண்டியதுடன் அந்த பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |
| (ஈ) சபையினால் பயன்படுத்தப்பட்ட 15 காணிகளின் உரிமைத்துவமும், சபையினால் பேணப்படும் 131 மயானங்களின் உரிமைத்துவமும் சபையினால் கையகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்கப்படுகிறது. | சபைக்கு சொந்தமான சொத்துக்களை கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 22 வெற்றிடங்களும், 04 மேலதிகங்களும் இருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களை விட அமைய, மாற்று, ஒப்பந்த அல்லது நாளாந்த படி அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 22 ஊழியர்களுக்கு சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 7,717,061 தொகை செலுத்தப்பட்டுள்ளது. | அவதானிப்புடன் இணங்கப்படுகிறது. | பதவியணியினரின் தேவைகள் காலரீதியாக மதிப்பாய்வு செய்யப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 04 வருமான விடயங்களில் மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மையான வருமானத்திற்கு இடையில் 26 முதல் 81 சதவீத வேறுபாடுகளும், 06 செலவின விடயங்களில் மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடு மற்றும் உண்மையான செலவினங்களுக்கு இடையே 20 சதவீதத்திற்கும் அதிகமான வேறுபாடுகளும் இருந்தன. | அவதானிப்புடன் இணங்கப்படுகிறது. | வருமான மதிப்பீடுகள் முடிந்தவரை பகுத்தறிவுடன் தயாரிக்கப்பட வேண்டும். |